## தமிழ்நாடு சுற்றுலாத் துறை சார்பில்

# ரூ.27.34 கோடியில் மேம்படுத்தப்பட்ட 7 சுற்றுலாத் தலங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, நவ. 27 -**

**தமிழ்நாடு சுற்றுலாத் துறை சார்பில் ரூ.27.34 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட 7 சுற்றுலாத் தலங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.11.2024) தலைமைச் செயலகத்தில், சுற்றுலாத் துறை சார்பில் ஒகேனக்கல் அருவிப் பகுதிகள், கொல்லிமலை, ஆண்டிபாளையம் ஏரி, வத்தல்மலை, முட்டம் கடற்கரை, அந்தியூர் ஏரி, மன்னார்குடி - ஹரித்ராநதி கோயில் குளம் ஆகியவை 27 கோடியே 34 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

ஏராளமான உள்ளூர் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், அன்னியச் செலாவணியினை ஈட்டுதல் ஆகியவற்றில் சுற்றுலாத் துறை முக்கிய பங்காற்றுகிறது. இந்தியாவில் சிறப்பான சுற்றுலாத் தலங்கள் அதிகமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முக்கிய இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் பல்வகையான சுற்றுலாத் தலங்கள், பழம் பெரும் திருக்கோயில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலை மற்றும் வனப்பகுதிகள், அழகிய கடற்கரைகள் போன்ற பல்வேறு சுற்றுலா தலங்கள் பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய பெரும் வாய்ப்புகள் அடங்கிய சுற்றுலாத்துறையை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டு உருவாக்கினார். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலா பேருந்து சேவைகள், சுற்றுலா பயணத்திட்டங்கள், ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதிகள், அமுதகம் என்ற பெயரிலான உணவு விடுதிகள், படகு குழாம்கள் போன்ற பல்வேறு சேவைகளை சுற்றுலா பயணிகளுக்கு வழங்கி வருகின்றது.

சுற்றுலாத் துறையின் 2021-22, 2022 - 23 மற்றும் 2023-24 ஆகிய ஆண்டுகளுக்கான மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளை செயல்படுத்திடும் வகையில், தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் அருவிப் பகுதிகளை முழுமையான சுற்றுலாத் தலமாக மேம்படுத்திட 17 கோடியே 57 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் நுழைவுவாயில் வளைவு, கழிப்பறைகள், நுழைவுச் சீட்டு வழங்குமிடம், உணவகம், படகு தளம், பார்வை மேடை, மசாஜ் செய்யும் இடம், குளியலறைகள், உடை மாற்றும் அறைகள், ஆழ்துளை கிணறு போன்ற முடிவுற்ற மேம்பாட்டுப் பணிகள்;

வத்தல்மலைப் பகுதியில் 2 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் நில சீரமைப்பு, வாகன நிறுத்துமிடம், நுழைவு வாயில் வளைவு, உணவகம், வரவேற்பறை, ஆழ்துளை கிணறு போன்ற முடிவுற்ற மேம்பாட்டுப் பணிகள்;

நாமக்கல் மாவட்டம், கொல்லி மலையை முக்கிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்திடும் வகையில் 2 கோடியே 22 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் செலவில் நுழைவுவாயில் வளைவு, வாகன நிறுத்துமிடம், நடைபாதை, கழிப்பறைகள், சாகச மற்றும் சுற்றுலா வசதிகள் போன்ற முடிவுற்ற மேம்பாட்டுப் பணிகள்;

திருப்பூர் மாவட்டம், ஆண்டிபாளையம் ஏரியில் 1 கோடியே 47 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில் நிலசீரமைப்பு, சாலை மற்றும் நடைபாதை, மின்சாரப் பணிகள், கண்காணிப்பு கேமிராக்கள் போன்ற முடிவுற்ற மேம்பாட்டுப் பணிகள்;

கன்னியாகுமரி மாவட்டம், முட்டம் கடற்கரையில் 2 கோடியே 84 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய் செலவில் பார்வையாளர்கள் மாடம், குழந்தைகள் விளையாடுமிடம், சென்ட்ரல் பிளாசா, நுழைவுச்சீட்டு வழங்குமிடம், தகவல் பலகை, சிற்பங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் போன்ற முடிவுற்ற மேம்பாட்டுப் பணிகள்;

ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஏரியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்திட 50 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட நடைபாதை, நிலச்சீரமைப்பு, படகு தளம், ஆழ்துளை கிணறு, மின்சாரப் பணிகள் போன்ற முடிவுற்ற மேம்பாட்டுப் பணிகள்;

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, ஹரித்ராநதி கோயில் குளத்தை மேம்படுத்திட 50 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட நடைபாதை, நிலச்சீரமைப்பு, படகுதளம், ஆழ்துளை கிணறு போன்ற முடிவுற்ற மேம்பாட்டுப் பணிகள்;

என மொத்தம் 27 கோடியே 34 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட சுற்றுலாத் தலங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், சுற்றுலாத் துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தருமபுரி மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. மணி, சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி, தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கி.சாந்தி உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; மதுரையில் நடந்த அ.தி.மு.க. கள ஆய்வுக் கூட்டத்தில் நத்தம் விஸ்வநாதன், “ தொண்டர்கள், எந்த ஆலோசனையையும், குறைகளையும் நிர்வாகிகளிடம் கூறக்கூடாது” என்று பேசியிருக்கிறாரே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; அதுதான் அ.தி.மு.க.வின் உட்கட்சி ஜனநாயகம் (!). விமர்சன உரிமை இல்லாத ஜனநாயகம் விபரீதமானது.**

**கள ஆய்வு என்ற பெயரில் அ.தி.மு.க.வினர் நடத்தும் நாடகம், அடிதடி - சரமாரித் தாக்குதல் - பல் உடைப்பு - தள்ளுமுள்ளு - தாக்குதல், என்றல்லவா கோரக் காட்சிகளுடன் அரங்கேறிக் கொண்டிருக்கிறது !**

**எடப்பாடி அ.தி.மு.க.வின் கள ஆய்வுக்கு, கலவர ஆய்வு என்று பெயர் வைத்துவிடலாமே !**

## 80 ஏழைக் குழந்தைகளுக்கு

# இலவச இதய அறுவை சிகிச்சை!

## சன் டி.வி. ரூ.1 கோடி நிதியுதவி!



சென்னை, நவ. 27 -

குழந்தைகளுக்கு இலவச இதய அறுவை சிகிச்சை செய்வதற்காக சன் டி.வி. குழுமம் ஒரு கோடி ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது.

முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் நினைவாக, ஏழை எளியோரின் கல்வி, மருத்துவச் சிகிச்சை, சமூக மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களுக்காக சன் பவுண்டேஷன் மற்றும் சன் டி.வி. பல்வேறு அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கி வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, அப்போலோ மருத்துவமனையில் செயல்பட்டு வரும் சாச்சி அறக்கட்டளை மூலம் ஏழைக் குழந்தைகளுக்கு இலவச இதய அறுவை சிகிச்சை செய்வதற்காக அந்த மருத்துவமனைக்கு சன் டி.வி. 1 கோடி ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது.

இதற்கான காசோலையை, அப்போலோ மருத்துவமனை குழந்தைகள் இதய சிகிச்சை பிரிவின் துறைத் தலைவர் டாக்டர் முத்துகுமரனிடம் சன் டி.வி. குழுமம் சார்பில் மல்லிகா மாறன், காவேரி கலாநிதி மாறன் ஆகியோர் வழங்கினர்.

அப்போது குழந்தைகள் இதய அறுவை சிகிச்சைப் பிரிவு துறைத் தலைவர் டாக்டர் நிவில் சாலமன், சென்னை மண்டல மருத்துவ சேவை இயக்குநர் டாக்டர் வெங்கடாசலம், குழந்தைகள் இதய சிகிச்சை நிபுணர் டாக்டர் சரண்யா அமல், மருத்துவமனை நிர்வாகிகள் நிரஞ்சனி, ராஜ்குமார் உடனிருந்தனர்.

“இந்த நிதியின் மூலம் தமிழ்நாடு, ஆந்திராவைச் சேர்ந்த 80 ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும் என்று குழந்தைகள் இதய சிகிச்சைப் பிரிவின் தலைவர் டாக்டர் முத்துக்குமரன் தெரிவித்தார்.

ஏழை எளியோருக்கு கல்வி, அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் கற்றல் சூழலை மேம்படுத்துதல், தரமான இலவச சிகிச்சை, மகளிர் மற்றும் இளைஞர் நலன், கிராமப்புற மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக சன் டி.வி.யும், சன் பவுண்டேஷனும் தொடர்ந்து நிதி உதவி அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.



கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் 25.11.2024 அன்று நாடாளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அலுவலகத்தில் அமித்ஷா அவர்களை நேரில் சந்தித்து கூட்டுறவுத் துறை தொடர்பான கோரிக்கையினை வழங்கினார். இந்நிகழ்வில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என்.சுப்பையன் ஆகியோர் உடனிருந்தனர்.


